**செப்டம்பர் - 12**

**"உங்கள் பொறுமையினால் உங்கள்ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்." - லூக் 21 : 19**

"நீங்கள் ஒன்றிலும் குறைபாடுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது என்று அப்போஸ்தலன் விளக்குகிறார். ஆகையால் பொறுமை மிகவும் தெளிவாக மற்றக் குணசீலங்களையும் சிறிதளவு சேர்த்துக் கொண்டிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களிடத்தில் பொறுமை நிச்சயமாகவே விசுவாசத்திற்குப் பிறகு உண்டாகுகிறது. பொறுமையின் அளவு பொதுவாக மொத்த விசுவாசத்தை அளக்கிறது. பொறுமையற்றவனாகவும், அமைதியற்றவனாகவும் தன்னைத்தானே கண்டுகொள்கிற கிறிஸ்தவன் தெளிவாகக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனாயிருப்பதில் குறைவுள்ளவனாய் இருக்கிறான். ஏனெனில் மற்றப்படி கர்த்தரிடத்தில் கிருபையுள்ள வாக்குத்தத்தங்களில் இளைப்பாறக்கூடியவனாயும், அவைகள் நிறைவேறக் காத்திருக்கிறவனாயும் இருப்பான். நியாயமான ஊக்கத்தையும், சக்தியையும் உபயோகித்த பிறகு அதன் பலன்களையும், காலங்களையும், சமயங்களையும் கர்த்தரிடத்தில் விட்டுவிட்டு அவன் திருப்தியுடன் இருக்க வேண்டும். **- Z ’03, 361 (R 3245)**

இந்த மூல வாக்கியம் "உங்கள் பொறுமையினாலே ஆத்துமாக்களைப் பத்திரப்படுத்துங்கள்" என்று இருக்க வேண்டும். பொறுமை என்ற வார்த்தை இங்கே நீடிய பொறுமையைக் குறிக்கிற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்படாமல், "உறுதி" என்று அர்த்தம் கொடுக்கிற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது குணத்தின் வலிமையைக் குறிக்கின்றது. அதனால் சந்தோஷத்துடன் சகிக்கிற துன்பங்களின் மத்தியில், தன்னடக்கத்தை அதில் பலப்படுத்திக்கொண்டு விடா முயற்சியுடன் நன்மை செய்வதில் வேகமாகச் செல்லுவோமாக. இந்த வியாக்கியானம் மூலவாக்கியத்தைத் தெளிவாக்குகிறது. நன்மை செய்யும்போது வழியிலுள்ள இடையூறுகளை சந்தோஷத்துடன் சகித்துக்கொண்டு தொடருவதற்கு யேசுவின் புத்திமதி நம்மை உற்சாகப்படுத்துகிறது. ஏனென்றால், இப்படிப்பட்ட ஒரு மார்க்கத்தினால் மாத்திரமே நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பத்திரப்படுத்திக் கொள்ள நம்மால் முடியும். **- P ’35, 117.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 37:7-9; பிர 7:8; புலம் 3:26,27; லூக் 8:15; ரோம 2:7; 5:3,4; 12:12; 15:4,5; கலா 6:9; கொலோ 1:10,11; 1தெச 1:3; எபே 6:12,15; 10:36; 12:1; யாக் 1:3,4;5:7,8.**

**கோபுர வாசிப்பு : Z ’13, 312 (R 5332).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் பொறுமையாயிருந்தேனா? எப்படி? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன் என்ன?**